சிதம்பரம் நகராட்சி

2019 ம் ஆண்டு ஆடி திங்கள் 31–ம் நாள் 16.08.2019 வெள்ளி கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெறும் சாதாரண நகர்மன்ற கூட்டம் நடைபெறும்

மன்றக்கூட்டப் பொருள்

1) சிதம்பரம் நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட இரு மின் பணியாளர்கள் மற்றும் இரு மின் பணி உதவியாளர்களில், இரு மின் பணியாளர் பணியிடங்களும், காலியாக உள்ளது. நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து மின் பணிகள் மற்றும் 3 புதைசாக்கடை நீரேற்று நிலையங்கள், வக்காரமாரி தலைமை குடிநீரேற்று நிலையம் ஆகிய நான்கு இடங்கள், மற்றும் சிறு மின்விசை பம்புகள் 79 எண்கள், போன்றவற்றில் ஏற்படும் பழுதுகளை அகற்ற போதிய மின் பணியாளர்கள் இன்மையால், பொதுமக்கள் பிரச்சனை அதிகமாக ஏற்படுகின்றது.

இதனை கருத்தில் கொண்டு, நிர்வாகம் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி, பொதுப்பணி மேற்பார்வையாளர் குறிப்பின்படி, குடிநீர் போன்ற அத்தியாவசிய பணிகள் செய்திட ஒப்பந்த அடிப்படையில் 3 மின் பணியாளர்கள் தேவைப்படுவதால், நகர்மன்ற தீர்மானம் எண்.276 நாள் 08.03.2019–ன்படி நான்கு மாத காலத்திற்கு அதே ஒப்பந்ததாரர் திரு S. கிருஷ்ணமூர்த்திக்கு, அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தொடர்ந்து **3 மின் பணியாளர்களை** வழங்கிட, நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டது. தற்போது 2019–20 ஆண்டு விலைவிகிதத்தில் மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோர இருப்பதால், மேலும் 2 மாத காலத்திற்கு 01.08.2019 முதல் 30.09.2019 வரை காலநீட்டிப்பு செய்யவும், அத ற்கான மதிப்பீட்டு தொகை ரூ.91,000/–க்கும், செலவை நகராட்சி வருவாய் நிதியின்கீழ் மே ற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) சிதம்பரம் நகராட்சி பொறியியல் பிரிவின்கீழ் செயல்பட்டுவரும், குடிநீர் பணி மற்றும் ஒப்பந்த பணிகள் மேற்பார்வையிட போதிய பணியாளர் பற்றாக்குறையாக உள்ளது. இவற் றில் தலைமை நீரேற்று நிலைய காவலர் பணியிடம் 7–ல், 6 பணியிடம் காலியாக உள்ளது. பட வரைவாளர் பணியிடம் 1–ல் 1 பணியிடம் காலியாக உள்ளது. பணி ஆய்வர் பணியிடம் 1–ல் 1 பணியிடம் காலியாக உள்ளது. பிட்டர் பணியிடம் 1–ல் 1 பணியிடம் காலியாக உள்ளது.

சிதம்பரம் நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் பணிகள் செய்வதற்கு போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால், நகரப் பகுதியில் அவ்வப்போது ஏற்படும் பிரசனைகளுக்கு சரிசெய்ய இயலாததால், நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படும் நிலையில் உள்ளது. இந்நிலையினை போக்க, நகராட்சி நிர்வாகம் மற்றும் பொதுமக்களின் நலனை

கருத்தில் கொண்டு, நகர பகுதிகளில் ஏற்படும் குடிநீர் பிரச்சனை பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் கீழ்காணும் பணியாளர்கள் வைத்து பணிகள் பார்க்க வேண்டிஉள்ளது.

மேற்கண்ட பணியை செய்வதற்கு மஸ்தூர்கள் 16 நபர்கள் தேவைப்படுவதால், நகர்மன்ற தீர்மானம் எண்.277 நாள் 08.03.2019–ன்படி நான்கு மாத காலத்திற்கு அதே ஒப்பந்ததாரர் திரு S. கிருஷ்ணமூர்த்திக்கு, அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தொடர்ந்து **மஸ்தூர்கள் 16 நபர்களை** வழங்கிட, நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டது. தற்போது 2019–20 ஆண்டு விலைவிகிதத்தில் மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோர இருப்பதால், மேலும் 2 மாத காலத்திற்கு 01.08.2019 முதல் 30.09.2019 வரை காலநீட்டிப்பு செய்யவும், அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.3.85 இலட்சத்திற்கும், செலவை குடிநீர் மற்றும் வடிகால் நிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

3) சிதம்பரம் நகராட்சி பொறியியல் பிரிவில் 7 வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளது. அவ ற்றிற்கு அரசால் அனுமதிக்கப்பட்ட ஓட்டுனர் பணியிடம் (Sanctioned Strength) இல்லை. மேலும், பொது சுகாாரப் பிரிவில் 7 வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளதற்கு. அரசால் அனுமதிக்கப்பட்ட பணியிடத்தில் 3 ஓட்டுனர்கள் மட்டும் நிரந்தர பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். ஆகவே, 14 வாகனங்களுக்கு, 3 ஓட்டுனர்கள் மட்டுமே பணிபுரிவதால், 11 வாகனங்களை இயக்க இயலாத நிலையில் உள்ளது.

இதனால், குடிநீர் விநியோகம், மற்றும் கழிவுநீர் அகற்றுதல் போன்ற இன்றியமையாத பணிகள் மிகவும் பாதிப்படைகின்றது. இதனை தவிர்த்திடும் வகையில் நிரந்தர பணியிடங்களில் எவரும் இல்லாததாலும், அத்தியாவசிய பணிகள் நடைபெற வேண்டி உள்ளதாலும், பொறியியல் பிரிவிற்கு 3 ஓட்டுனர்களை ஒப்பந்த அடிப்படையில் கீழ்காணும் பணியாளர்கள் வைத்து பணிகள் பார்க்கவேண்டி உள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்கள் 13.01.2016–ந் தேதியிட்ட ந.க.எண்.39260/P3/2015 எண்ணிட்ட கடிதத்தில் ஒரு டிப்பர் லாரி வாங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. அதில் ஓட்டுநர் தனியாகவோ அல்லது வெளி முகமை மூலமாகவோ அல்லது முன்னாள் இராணுவத்தினர்களை வைத்து பணி செய்துகொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் நிர்வாக நலன் கருதி, அத்தியாவசிய பணிகள் செய்திட ஒப்பந்த அடிப்படையில் 6 ஓட்டுநர்களை தேவைப்படுவதால், நகர்மன்ற தீர்மானம் எண்.280 நாள் 08.03.2019–ன்படி நான்கு மாத காலத்திற்கு அதே ஒப்பந்ததாரர் திரு S. கிருஷ்ணமூர்த்திக்கு, அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தொடர்ந்து **6 ஓட்டுனர்களை** வழங்கிட, நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டது. தற்போது 2019–20 ஆண்டு விலைவிகிதத்தில் மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோர இருப்பதால், மேலும் 2 மாத காலத்திற்கு 01.08.2019 முதல் 30.09.2019 வரை காலநீட்டிப்பு செய்யவும், அத ற்கான மதிப்பீட்டு தொகை ரூ.1.90 இலட்சத்திற்கும், செலவை நகராட்சி வருவாய் நிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

4) சிதம்பரம் நகராட்சியில் அண்மையில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் நடைபெற்று வருவதால், நகரில் உள்ள அனைத்து சாலைகளும் சேதமடைந்து போக்குவரத்திற்கு லாயக்கற்ற நிலையில் இருந்ததையடுத்து, தற்போது சில சாலைகளுக்கு TURIF மற்றும் IUDM 2018–2019 திட்டத்தின்கீழ் சாலைகள் போடப்பட்டுள்ளது, இன்னும் சில சாலைகள் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் மீதம் விடுபட்டுள்ள சாலைகளையும் செப்பணிட அரசுக்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கவும் , தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2019 – 2020 ன் கீழ் பணிகள் மேற்கொள்ளவும், சாலைகள் தேர்வுசெய்து மன்றத்தின் அனுமதிக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>சாலைகள் அமைக்கப்பட வேண்டிய தெருக்களின் விபரம் பின்வருமாறு.</u>

வரிசை எண்	பணிகளின் விபரம்	மொத்த சாலைகளின் எண்ணிக்கை	சாலையின் நீளம் (கி .மீட்டரில்)	மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் லட்சத்தில்)
1.	2.	3.	4.	5.
	தார் சாலை (B T ROAD)			
1.	சிதம்பரம் நகராட்சிக்கு சொந்தமான, சம்மந்தகாரத் தெரு, முத்துமாணிக்கம் தெரு, மீனவர்காலணி, குரு தெரு, சுவாதி நகர், ஜவஹர் தெரு, சின்னகாஜியார் தெரு, பெரிய வாணியத் தெரு, கன்னிராமன் தெரு, புதுப்பேட்டை வடக்குத் தெரு, சிவ சண்முகம் தெரு , ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி . **(சிப்பம் – 1)**	11	3.010 கி மீ	230.00
2.	சிதம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட இ பி இறக்கம், அனந்தீஸ்வரன் கோயில் தெரு, திரௌபதியம்மன் கோயில் தெரு, குஞ்சரமூர்த்தி விநாயகர் கோயில் தெரு, பன்னீர்செல்வம் தெரு, எல்லையம்மன்கோயில் மடவிளாகத் தெரு, அனந்தீஸ்வரன்கோயில் மடவிளாகத் தெரு, காசிம்கான் பேட்டைத் தெரு, பெரியார் தெரு, அரிய சந்து, திரு வி க தெரு, காசிப்பிள்ளை	15	3.000 கி மீ	245.00

	சந்து, தொப்பையான் தெரு, கொள்ளுமேட்டுத் தெரு, மேட்டுத் தெரு, வெள்ளையன் சந்து, ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி **(சிப்பம் – II)**			
3.	வேங்கான் மெயின் ரோடு மற்றும் குறுக்கு சாலை, வாகீச நகர் குறுக்கு சாலை, மேல புதுத்தெரு, தில்லை நகர் குறுக்கு சாலை, சுப்ரமணியத் தெரு, காரியபெருமாள் கோயில் தெரு, 16 கால் மண்டபத்தெரு, காந்தி நகர், வ உ சி தெரு முதல் கோவிந்தசாமி தெரு வரை, அண்ணா தெரு, மற்றும் கொத்தங்குடி பூக்காரத் தெரு, ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி **(சிப்பம் – III)**	11	3.067 கி மீ	230.00
4.	ஸ்டேட் பேங்க் காலனி, முருகன் தெரு, இளமையாக்கினார் கோயில் மேலத் தெரு மற்றும் கீழத்தெரு, தெற்கு ம ற்றும் வடக்குத் தெரு, வீரபத்திரசாமி கோயில் தெரு மற்றும் சந்து, சுண்ணாம்புக்காரத் தெரு மற்றும் ஞாயி ற்றுக் கிழமை மடத் தெரு, அங்காளம்மன் கோயில் தெரு, இளமையாக்கினார் கோயில் மடத்தெரு, பெரிய காஜியார் தெரு, பஜனை மடத் தெரு, சோமசுந்தரம் தெரு, சாத்தப்படித் தெரு , மாலைக்கட்டித் தெரு மற்றும் உமையாள் சந்து, ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி **(சிப்பம் – IV)**	15	2.938 கி மீ	220.00
5.	கனகசபை நகர் முதல் மெயின் ரோடு, 3 வது மெயின் ரோடு, கனகசபை நகர் குறுக்குத் தெரு, சுசிலாம்பாள் நகர், அங்கநாதன் நகர், மின் நகர் குறுக்குத் தெரு, ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி **(சிப்பம் – V)**	6	2,038 கி மீ	168.00
	சிமெண்ட் சாலை (CC ROADS)			
6.	தங்கரத சந்து, கீழ புதுத்தெரு, வல்லபி மாரிம்மன்கோயில் தெரு, வாகீச நகர் ICDS பின்புறம் , மானா மேட்டு தெரு, காலநாதசுவாமி கோயில் தெரு, காரைகாட்டு சொக்கலிங்கம் தெரு, வடக்கு வடுகத் தெரு, நேதாஜிதெரு, தேரடி கடைத் தெரு, கொத்தங்குடி மெயின் ரோடு மற்றும் குறுக்குத் தெரு, குமரன் தெரு, வ உ சி தெரு,	21	3.234 கி மீ	227.00

	காயத்திரி அம்மன் கோயில் மேலத் தெரு, அசத்கான் சந்து, காட்டு பாவா சந்து, கீழதெரு மாரியம்மன்கோயில் தெரு, நேரு நகர், ஞானபிரகாசம் தெரு முதல் எஸ் பி கோயில் தெரு வரை, ஞானபிரகாசம் குளம் தெற்கு பகுதி மற்றும் அயன் தெரு. ஆகிய தெருக்களுக்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி **(சிப்பம் – VI)**			
7.	கொத்தவால் தெரு, மார்க்கெட் தெரு, பாவா தெரு, செக்கடித் தெரு, வாணக்காரத் தெரு, அப்பாவு சந்து, செங்கட்டான் தெரு, செங்கட்டான் தெரு குறுக்கு ரோடு, தெற்கு வாணியத் தெரு சந்து, தில்லை நடராஜர் நகர், தில்லை நடராஜர் சாலை, கனகசபை நகர் 3 வது மெயின் ரோடு, கனகசபை நகர் 2 மற்றும் 5 வது குறுக்குத் தெரு, கனகசபை நகர் முதல் மெயின் ரோடு, ஆகிய தெருக்களுக்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி **(சிப்பம் – VII)**	14	2.555 கி மீ	180.00
	மொத்தம் (சிப்பம் 1 முதல் VII வரை)	**93**	**19.842 கி மீ**	**1500.00**

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

5) சிதம்பரம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் , உயிரி அகழ்வு (Bio Mining) முறையில் குப்பைகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மே ற்படி பணி இன்னும் முடிவடையாததால், தரம் பிரிக்க இயலாத நிலையில் உள்ள திடக்கழிவுகளை தரம் பிரித்து உரமாக்க ஏதுவாக பெறப்பட்ட குப்பைகளை தரம் பிரிக்கும் உபகரணங்களுடன் கூடிய இயந்திரம் (TROMMEL) பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது.

இதனை, ஈரோடு மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசரம் அவசியம் கருதி , திடக்கழிவுகளை வகைப்படுத்தி பிரித்து உரமாக மாற்றும் பணியை மே ற்கொள்ள ஏதுவாக, சிதம்பரம் நகராட்சியில், தற்போது உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ள மேற்கண்ட உபகரணங்களுடன் கூடிய இயந்திரத்தினை (TROMMEL) நகரமன்ற ஒப்புதல் பெற்று, நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்க கோரி, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 26.07.2019 ந் தேதிய ந.க.எண்.8324/தி3/2019 எண்ணிட்ட செயல்முறை ஆணையில் உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே, தற்போது சிதம்பரம் நகராட்சியில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள இயந்திரத்தினை (TROMMEL), நிபந்தனைகளுக்குட்பட்டு, ஈரோடு மாநகராட்சி பணிக்கு தற்காலிகமாக வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு.

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவி ற்கிணங்க, மேற்படி உபகரணங்களுடன் கூடிய இயந்திரத்தினை நிபந்தனைகளுக்குட்பட்டு, ஈரோடு மாநகராட்சிக்கு தற்காலிகமாக வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4996 /2014 /E1)

6) சிதம்பரம் நகராட்சியில் அரசால் அனுமதிக்கப்பட்ட தட்டச்சு பணியிடம்–2. இவற்றில் 1 தட்டச்சர் பணி நிரப்பப்பட்டுள்ளது. 1 பணியிடம் காலியாக உள்ளது. தற்போது அனைத்து பணிகளும், கணினி மயமாக்கப்பட்டதில், பொறியியல் பிரிவில் தினசரி வரும் தபால்கள், வாராந்திர, மாதாந்திர அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் தயார் செய்தும் ம ற்றும் அலுவலக பணிகள் செய்வதற்கும், நகராட்சியில் போதிய தட்டச்சர் இல்லாததால் உரிய நேரத்தில் அறிக்கைகள் அனுப்புவதற்கு இயலாமல் சிரமமாக உள்ளது. இதனை தவிர்க்கும் பொருட்டு, நிர்வாக நலன் கருதி, மேலும் ஒரு தட்டச்சர் தேவைப்படுவதால், நகர்மன்ற தீர்மானம் எண்.279 நாள் 08.03.2019–ன்படி நான்கு மாத காலத்திற்கு அதே ஒப்பந்ததாரர் திரு S. கிருஷ்ணமூர்த்திக்கு, அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தொடர்ந்து **ஒரு கணினி இயக்க தெரிந்த தட்டச்சரை** வழங்கிட, நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டது. தற்போது 2019–20 ஆண்டு விலைவிகிதத்தில் மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோர இருப்பதால், மேலும் 2 மாத காலத்திற்கு 01.08.2019 முதல் 30.09.2019 வரை காலநீட்டிப்பு செய்யவும், அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.31,000/–க்கும், செலவை வருவாய் நிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

7) இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய 07.08.2019 அன்று **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2019–2020** கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ. எண்.	பணியின் விபரம்	ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம்	மதிப்பீட்டு தொகை	ஒப்பந்த சதவீதம் குறைவு	ஒப்பந்த சதவீதம் அதிகம்
1	2	3	4	5	6
	குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19				
1	சிதம்பரம் நகராட்சி பகுதியில் செயல்பட்டுவரும் மூன்று பாதாள சாக்கடை திட்ட கழிவுநீரேற்று நிலையங்களில் உள்ள கிணறுகள் தூர்வாரும் பணி	**திருமதி ஆர். கோமதி, ஒப்பந்ததாரர், சிதம்பரம்.**	2,10,000/–	மதிப்பீட்டினைவிட 0.02 % குறைவு.	––
		திரு கே. ரஜினிகாந்த், ஒப்பந்ததாரர், சிதம்பரம்.		––	மதிப்பீட்டினை விட 0.46 % அதிகம்,

அலுவலகக் குறிப்பு : 1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக, ஆனால் மதிப்பீட்டினைவிட 0.02 % குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் **திருமதி.ஆர்.கோமதி, சிதம்பரம்** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2760/2019/இ1)

8) சிதம்பரம் நகராட்சியில் பொது சுகாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு, கொசுக்களை அழிக்க தேவைப்படும் **6 எண்கள்** புகை போக்கி கொசு ஒழிப்பு இயந்திரங்கள், நகராட்சிக்கு சப்ளை செய்யும் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு தொகை **ரூ.5.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினங்களை நகராட்சி பொது நிதி 2019–20–ன்கீழ் மேற்கொள்ளலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதிபெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.எச்.1 / 7479 / 2018)

இடம்: சிதம்பரம்
நாள்: 16.08. 2019

தனி அலுவலர்,
சிதம்பரம் நகராட்சி